பக்கங்கள் 08

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 10 திங்கட்கிழமை (23.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 95



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே


# யாழில் முதலாவது கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டார்

## சுவிஸ் போதகருடன் நெருங்கி பழகியவர் தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதலாவது நோயாளி நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

**தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்த காரரான இவர் சுவிஸ் நாட்டு போதகருடன் நெருங்கி பழகியுள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவரை IDH தொற்று நோயியல் மருத்துவமனைக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும், நோயாளர்கள் 08

## கொரோனா 82ஆக உயர்வு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 5 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதரா அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் 08

### ஊரடங்கு வேளை
## கத்தியுடன் நடமாடிய இருவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த நிலையில் யாழ்ப்பாணம், சங்கானை பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் கத்தியுடன் மோட்டார்சைக்கிளில் 08

### ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டாலும்
## வடக்கு மக்கள் தங்கள் மாவட்டத்தை விட்டு வெளியேற முடியாது

### ஏ9 வீதி மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சுவிஸ்சர்லாந்து போதகர் மூலம் கொரோனா வைரஸ் பரவியதையடுத்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஜெப ஆராதனையின் மூலம் கொரோனா வைரஸ் தொற்றிற்கு இலக்கானவர்களை அடையாளம் காணுவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாளை ஊரடங்கு சட்டம் வடக்கில் நீக்கப்பட்டு, மீண்டும் மதியம் 2.00 மணிக்கு அமுல்படுத்தப்படவுள்ளது.

ஊரடங்கு நீக்கப்பட்டாலும், வடக்கின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள், தாங்கள் வாழும் மாவட்டங்களை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்நிலையில் நேற்று மாலை 6.00 மணிக்கு பின்னர் 08

## இத்தாலியில் கொரோனாவால் நேற்று 651 பேர் உயிரிழப்பு

### பலியானோர் எண்ணிக்கை 5476 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இத்தாலியில் தொடர்ந்து அசுர வேகத்தில் பரவி வரும் கொரோனா வைரசுக்கு பலியானோர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 476 ஆக உயர்ந்துள்ளது. நேற்று மட்டும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு 651 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவில் தோன்றி உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா உள்பட உலகின் 08

### தமிழ் சினிமாவின்
## பிரபல இயக்குநர் விசு காலமானார்



(கொழும்பு)

தமிழ் திரைப்பட இயக்குநரும் நடிகருமான விசு (வயது 75) உடல் நலக் குறைவால் நேற்று 08

## இறந்தவர்களை புதைப்பதற்கு கூட எங்களிடம் இடமில்லை

### கண்ணீருடன் இத்தாலி ஜனாதிபதி





(ரோம்)

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் இறந்தவர்களின் சடலங்களை கூட புதைப்பதற்கு இடமில்லாமல் தவித்து வருகின்றோம் என இத்தாலியின் ஜனாதிபதி கண்ணீர் மல்க தெரிவித்தார்.

ஒருநாட்டின் தலைவர் அழுவதை போல ஒரு கொடுமையான காட்சி இருக்க முடியாது என்று இத்தாலி ஜனாதிபதி அழுத காட்சி வர்ணிக்கப்பட்டுள்ளது. 08

### கொரோனாவால்
## யாழ்ப்பாணத்து பெண் பிரான்ஸில் பலி

(பாரிஸ்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரும் பிரான்ஸில் வசிப்பவரு மான பெண்ணொருவர் கொரோனா தொற்றுக்கு இலக்காகி கடந்த 6 நாட்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோகன் சித்திரா என்ற 52 வயதான குடும்பப் 08

### இலவச அம்புலன்ஸுக்கு
## அழையுங்கள்

**021 222 4444**
**071 019 9199**

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட எல்லைக்குள் ஊரடங்கு வேளையில் அவசர நோயாளர்களை வைத்தியச்சாலைக்குக் கொண்டு செல்வ தற்கான இலங்கை புனித சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தமது அம்புலன்ஸ் வண்டிகளை இலவச சேவையில் ஈடுபடுத்தவுள்ளது. 08

## ஊரடங்குவேளை வீதியில் நடமாடிய 790 பேர் கைது

### 256 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

நாட்டில் நடைமுறையிலிருக்கும் ஊரடங்கு வேளையில் வீதியில் நடமாடிய 790 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 256 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் இன்று காலை 6.00 மணிவரை ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், கம்பஹா மற் 08

## வடக்கின் 5 மாவட்டங்களில் ஊரடங்கு நாளை செவ்வாய்

### காலை 6 மணி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளி ஒருவர் இனங்காணகப்பட்ட நிலையில் வடக்கில் 5 மாவட்டங்களில் ஊரடங்கு செவ் வாய்க்கிழமை காலை 6.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு சட்டம் மார்ச் 24, செவ்வாய் காலை 6.00 08

# கேப்பாப்புலவு விமானப்படைத் தலைமையகத்தில் இரண்டு கட்டங்களாக 203 பேர் தனிமைப்படுத்தல்









(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்புலவு விமானப்படைத் தலைமையகத்தில் அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு நேற்று நண்பகல் இரண்டாவது தடவையாக 97 பேர் கொண்டு வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

வெளிநாடுகளில் இருந்து விமானம் மூலம் நாட்டிற்கு வந்தவர்களில் மூன்று பேருந்துக்களில் பிக்குகள் 4 பேரும் 24 ஆண்களும், 69 பெண்களுமாக 97 பேர் கொண்டுவரப்பட்டனர். இவர்களுடன் மொத்தமாக 203 பேர் கேப்பாப்புலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர். நேற்று முன்தினம் 21 ஆம் திகதி 41 பேரும் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் 65 பேரும் நண்பகல் 12.30 மணியளவில் 97 பேருமாக மொத்தமாக 203 பேர் கேப்பாப்புலவு விமானப் படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர். (இ-281)

# பிக்குகள் உட்பட 233 யாத்திரிகள் கொடிகாமத்தில் தனிமைப்படுத்தல்





(யாழ்ப்பாணம்)

எட்டு பேருந்துகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் கொடிகாமம் கெற்பேலியிலுள்ள 522 ஆவது பிரிகேட் படைமுகாமில் அமைக்கப்பட்ட கொரோனா தனிமைப்படுத்தல் முகாமுக்கு பிக்குகள் உள்ளிட்ட 233 பேர் அழைத்து வரப்பட்டனர்.

இந்தியாவுக்கு யாத்திரிகர்களாகச் சென்ற பிக்குகள் உள்ளிட்ட 233 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு வருகை தந்த நிலையில் தனிமைப்படுத்தலுக்காக யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் இவர்கள் அழைத்துவரப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)




**சாவகச்சேரி நகரசபையினர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காலப்பகுதியில் பொது இடங்களான பேருந்து நிலையம், சந்தை உள்ளிட்ட இடங்களில் கிருமி தொற்று நீக்கிகளை விசிறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (படங்கள்:-சுபேசன்)**

# நிவாரணத்திற்கு நிதியம்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளையில், அசௌகரியங்களுக்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென நிர்வாக சேவைகள் சங்கம் நிதியம் ஒன்றை ஆரம்பித்தது.

பிரதேச செயலாளர் பிரிவுகளின் ஊடாக உலர் உணவுப் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

10 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்தில், பொதுமக்கள் நிதியுதவி வழங்க முடியும். இலங்கை வங்கியின் கொழும்பு கோட்டை கிளையின் 840 259 56 என்ற கணக்கு இலக்கத்திற்கு தங்களின் நிதியுதவியை வைப்பிலிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கும் கொரோனா

## வைரஸ் பிடிக்குள் 188 நாடுகள்
## 14 ஆயிரத்தைத் தாண்டியது பலி
### 3 இலட்சத்து 7 ஆயிரத்து 725 பேர் பாதிப்பு



(வோஷிங்டன்)

கொடிய கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் பலியானோர் எண்ணிக்கை 14 ஆயிரத்தைத் தாண்டியது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் மாதம் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 188 நாடுகளில் பரவியுள்ளது. இந்த வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்நிலையில் உலகம் முழுவதும் இதுவரை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 725 பேருக்கு வைரஸ் பரவியது. 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் உயிரைக் குடித்தது. மேலும், இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 95 ஆயிரத்து 797 பேர் சிகிச்சை பெற்று வீடு திருப்பியுள்ளனர். (இ)

| நாடு | பலி |
|---|---|
| இத்தாலி | 4,825 |
| சீனா | 3,261 |
| ஈரான் | 1,556 |
| ஸ்பெயின் | 1,378 |
| பிரான்ஸ் | 562 |
| தென்கொரியா | 104 |
| அமெரிக்கா | 344 |
| ஜப்பான் | 36 |
| இங்கிலாந்து | 233 |
| இந்தியா | 4 |
| ஜேர்மனி | 84 |
| சுவிஸ்சர்லாந்து | 80 |
| நெதர்லாந்து | 136 |
| பெல்ஜியம் | 67 |
| பிரேசில் | 18 |
| கிரீஸ் | 13 |
| இந்தோனேசியா | 38 |
| பிலிப்பைன்ஸ் | 19 |
| ஈராக் | 17 |
| சான் மரினோ | 20 |
| அல்ஜீரியா | 15 |

## அத்தியாவசிய தேவையானால் மட்டும் வீட்டுக்கு ஒருவர் வெளியே செல்லவும்

### பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்து



(சாவகச்சேரி)

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் வேளைகளில் அத்தியாவ சியத் தேவையிருந்தால் மாத்திரம் வீட்டுக்கு ஒருவர் வெளியே சென்று தேவை முடிந்தவுடன் மீண்டும் வீட்டுக்குச் செல்லுங்கள் என சாவ கச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ அறிவுறுத்தினார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதில் பொது மக் களின் வகிபாகம் தொடர்பாக ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார், அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்கு நேரத்தில் வைத்திய சாலை,சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகம், மாகாணசபை, பிரதேசசபை, நீர்ப்பாசனத் திணைக் களம் உள்ளிட்ட திணைக்களங் களில் பணி புரிவோர் தமது பணி அடையாள அட்டையுடன் பணி விடயமாக வெளியே செல்ல முடியும்.

அத்துடன் வெளிநாட்டவர்கள் விமான நிலையம் சென்று வரவும் விசேட அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தவிர சுதொச நிறுவன வாகனங்கள் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டது. விசேடமாக விவசாயத்தில் ஈடுபடுவோர் மற்றும் ஆலய பூசகர்களுக்கும் ஊரடங்கு நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

ஆலயத்தில் தினப் பூஜைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்ட போதிலும் மக்கள் ஒன்றுகூடத் தடை விதிக்கப்பட்டது

இவ்வாறான அத்தியாவசியத் தேவைகள் எதுவும் இன்றி ஊரடங்கு நேரத்தல் வெளியே நடமாடினால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

பொதுமக்கள் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்து வதன் நோக்கமும் கொரோனா பரவலைத் தடுக்கவே.

அதனைப் பொதுமக்கள் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்துடன் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் நேரங் களிலும்வீட்டை விட்டு வெளியே செல்வதனைத் தவிர்க்க வேண்டும்.

அத்தியாவசியத் தேவை இருந் தால் மாத்திரம் வீட்டிற்கு ஒருவர் வெளியே சென்று தேவை முடிந்த வுடன் வீடுகளுக்குச் செல்லுங்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் வேளை யில் அதிக சன நெரிசல் ஏற்படும் எனவும் மேலும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## விமானங்கள், கப்பல்கள் இலங்கைவரத் தடை

(கொழும்பு)

அனைத்து பயணிகள் விமானம் மற்றும் கப்பல்கள் இலங்கைக்கு வருவது உடன் இடைநிறுத்தப் பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் முடிவடையும் வரையில் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ)

# கொரோனா அச்சம் ஊரடங்கு உத்தரவால் முடங்கியது வடக்கு



## யாழ்ப்பாணம்





## கிளிநொச்சி







## முல்லைத்தீவு





## வவுனியா






## மன்னார்






# கைதிக்கு தலையில் துப்பாக்கிச்சூடு!

## 6 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சை



(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற குழப்ப நிலையின் போது கொல்லப்பட்ட இரு கைதிகளில் ஒருவர், தலையைக் குறி வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு காரணமாகவே உயிரிழந்ததாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீர தெரிவித்தார்.



இந்நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அமைதியின்மை, வன்முறை, தீ வைப்பு சம்பவங்கள் நேற்றுக் காலை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும், அநுராதபுரம் பொலிஸாரால் சம்பவம் தொடர்பில் சிறப்பு விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரட்ன கூறினார்.

வன்முறை, அமைதியின்மையின் போது 8 கைதிகள் காயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவர்களில் இருவர் உயிரிழந்ததாகவும் சுட்டிக் காட்டிய பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய, ஏனைய 6 பேரும் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் அநுராதபுரம் சிறையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் சிறைச்சாலையின் பாதுகாப்பை பொலிஸார் தற்போது உறுதி செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தமிழ் அரசியல் கைதிகளின் உயிரோடு விளையாடாதீர்கள்

## அரசிடம் அடைக்கலநாதன் அவசர கோரிக்கை



(வவுனியா)

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உயிரோடு விளையாடாதீர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அரச தரப்பிடம் அவசர கோரிக்கை விடுத்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரியின் தகவலின் அடிப்படையில் அரசியல் கைதிகள் பாதுகாப்புடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் சிறைக்காலவர்களுக்குமிடையில் முரண்பாடான நிலை ஏற்பட்டதாகவும் இதன் காரணமாக சிறைக்கைதிகளுக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் சிலருக்கு கடும் காய்ச்சல்ஏற்பட்டமையால்கொரோனா வைரஸ் தொற்றாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வை கப் பட்டனர்.

இதனையடுத்து அங்குள்ள ஏனைய கைதிகள் தமக்கான பாதுகாப்பை வழங்குமாறு கோரி சிறைக்காவலர்களுடன் முரண்பட்டதுடன் தம்மை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரி கலவரத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக கைதி கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது உயிருக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வகையில் பாதுகாப்பை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்குமப்பால் கைதிகள் அனைவரையும் மனிதாபிமானத்துடன் நோக்கி அரசு அவர்களுக்கான மருத்துவ பாதுகாப்புடன் உயிர்ப் பாதுகாப்பையும் வழங்க வேண்டும்

இதேவேளை சிறைச்சாலை அத்தியட்சகருடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியதாகவும் தமிழ் அரசியல் கைதிகள் பாதுகாப்பாக உள்ளனர் எனத் தெரிவித்ததாகவும் அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-299)

# தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு ஆபத்தில்லை

## அமைச்சர் டக்ளஸ் உறுதிப்படுத்தல்



(வவுனியா)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தால் தமிழ் அரசியல் கைதிகளின் உயிருக்கு ஆபத்தில்லை எனத் தெரிவித்த, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை தொடர் பாக அமைச்சரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை அடுத்து அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உற வினர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய சிறைச் சாலை அதிகாரிகளுடன் உடன டியாக தொலை பேசியூடாகத் தொடர்பு கொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்தேன்.

அதன் பிரகாரம் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் அவர்கள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-299)

# அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு கரிசனை கொள்ளவில்லை

## ஆனந்தன் கவலை



(வவுனியா)

ஆட்சிமாற்றங்கள் இடம்பெற்று வருகின்ற போதும் தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையிலோ அல்லது அவர்களின் கோரிக்கைகள் தொடர்பிலோ அரசாங்கத் தரப்பினரின் மனநிலையிலோ மாற்றங்கள் ஏற்பட்டதாக இல்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் கவலை வெளியிட்டார்.

ஊடகங்களுக்கு அவர் அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தற்போது முழு நாடுமே கொரோனா வைரஸின் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக சிறைக்கைதிகள் அனைவருமே இந்த வைரஸின் தாக்கம் ஏற்பட்டு விடும் என்ற பதற்றமான மன நிலையுடன் அண்மைய நாட்களைக் கழித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அண்மையில் பாரிய குற்றங்களையிழைத்த குற்றவாளிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்ட வர்களின் சிறைக் கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் தமக்கான சிறைக் கூடங்களைச் சரியாகப் பராமரித்து சுத்தமாக பேணிவந்த நிலையில் அவர்களை வேறு கூடங்களுக்கு மாற்றி நெருக்கடியான சூழலில் வைக்கப்பட்டமையானது கண்டிக்கத்தக்கதாகும்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்குகள் பதியப்பட்டு நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வாழ்க்கையில் அரைவாசிக்கும் அதிகமான காலத்தை சிறைகளிலேயே கழித்துள்ள நிலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது விடுதலையை வலியுறுத்தியபோதும் அவை பாரா முகமாகவே இருக்கின்றன.

எனவே, நாட்டின் தற்போதைய இக் கட்டான நிலைமையைக் கருத்திற்கொண்டும் தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்ப் பாதுகாப்பைக் கவனத்திற்கொண்டும் தற்காலிகமாக நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனாவின் தாக்கம் உலகளாவிய ரீதியில் அதிகரித்தபோது, ஈரான் அரசு தனக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்கள், போராட்டங்களை நடத்திய குற்றச்சாட்டில் சிறையில் அடைத்திருந்த ஆயிரக் கணக்கானவர்களை நிபந்தனை யின் அடிப்படையில் விடுவித்தது.

மேலும், இத்தாலி, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உயிர் அச்சம் காரணமாக சிறைக் கைதிகள் போராட்டங்களை முன்னெடுத்தமையால் பதற்றமான சூழலும் ஏற்பட்டிருந்தது.

எனவே, இவ்வாறான முன்னுதாரணங்கள் தொடர்பில் கரிசனை கொண்டு உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு கோருகின்றேன் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-299)

# கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த பிரதமர் மோடி சுய ஊரடங்கு உத்தரவு

(டில்லி)
கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக மக்கள் சுய ஊரடங்கை கடைப்பிடிக்க வேண்டும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் வேகமாகப் பரவி வருகிறது.

இந்தியாவில் இதுவரை 400 பேருக்கு மேல்கொரோனா வைரஸ் பரவியுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 4 பேர் உயிரிழுந்தனர்.

இதற்கிடையே, கொரோனா



வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த மக்கள் தங்களைத் தாங்களாகவே தனிமைப்படுத்த வேண்டும்.

மார்ச் - 22 ஆம் திகதி நேற்று யாரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று சுய ஊரடங்கை பின்பற்ற வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

இந்நிலையில், பிரதமர் மோடி அறிவித்த சுய ஊரடங்கு நேற்றுக் காலை 7 மணிக்கு தொடங்கியது. இதனால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

புகையிரத போக்குவரத்து நிறுத்தப்பட்டது. சுய ஊரடங்கு காரணமாக மக்கள் தங்கள் வீடுகளிலேயே தஞ்சமடைந்தனர். (இ-7)






## 22 முகாம்களில் 3063 பேர் கண்காணிப்பில்; 10 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தல்



(கொழும்பு)
கொவிட் - 19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க மாலம்பே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை பயன்படுத்தப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அதேபோன்று கொத்தலாவல வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதற்கமைய 22 கொரோனா வைரஸ் தடுப்பு முகாம்களில் சுமார் 3063 பேர் கண் காணிப்புக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர்களில் 31 வெளிநாட்டவர்களும் அடங்குவதாக தனிமைப்படுத்தல் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேலும் சுகாதாரப் பிரிவினர் உளவுத்துறையினர், இராணுவம் பொலிஸார், மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் அடையாளம் காணப்பட்ட சுமார் பத்தாயிரம் பேரை சுய தனிமைப்படுத்தலை பின்பற்றுமாறு அறிவுறுத்தினர்.

இதேவேளை நேற்று முன்தினம் முதல் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை முழுமையாக கொரோனா தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையமாக மாற்றப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அத்துடன் நாடு முழுவதும் 30 வைத்தியசாலைகள் வரையில் சிகிச்சையளிக்க தயார் படுத்தப்பட்டுள்ளதாகவும்

அதற்கமைய சாதாரண விடுதிகளில் 36 கட்டில்களும், அவசர சிகிச்சைப் பிரிவுகளில் 130 கட்டில்கள் வரையில் தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெயிஸ் அமெரிக்கா நிறுவனமும் ஹோமாகம வைத்தியசாலையும் கொரோனா தொற்றுக் குள்ளாகும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இராணுவத்தால் மாற்றப்பட்டு வருவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

நாட்டில் இனம் காணப்பட்ட 77 நோயாளர்களில் 69 பேர் தற்சமயம் ஐ.டி.எச் மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

மேலும் நால்வர் அநுராதபுரம் வைத்தியசாலையிலும். மூவர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 48 பேர் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

## கொரோனாவைக் கட்டுப்படுத்தும் அவசர மருத்துவ சேவைக்காக 70 மில். வழங்கிய தொழிலதிபர்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான அவசர மருத்துவ சேவைகளுக்காக தனது தனிப்பட்ட நிதியிலிருந்து 70 மில்லியன் ரூபாய் வழங்குவதாக தொழிலதிபர் தம்மிக்க பெரேரா அறிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ஆறு செயற்கை சுவாசக்கருவிகள், அவசரசிகிச்சைப் பிரிவுக்கான குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான 169 படுக்கைகள் உட்பட 485 மருத்துவ படுக்கைகள் என்பன வழங்கப்படவுள்ளன.


மேலும் கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுத்துள்ள செயற்றிட்டங்களுக்கு தனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளதாக தெரிவித்தா் அவர் மேற்படி உதவித்தொகையானது முதற்




கட்டமானது என்றும் அடுத்துவரும் காலப்பகுதியில் தேவைகளுக்கு ஏற்வகையில் மேலதிக உதவிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தொழிலதிபர் ஒருவர் வழங்கியுள்ள முதல் உதவித் தொகை அறிவிப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஒரு தலைமுறையை பறிகொடுத்த இத்தாலி! இறந்தவர்களை புதைக்கக்கூட முடியாமல் தவிப்பு





(ரோம்)
இத்தாலியில் கொரோனா வைரஸால் மோசமாக பாதிக்கப்பட்ட பெர்காமோவில் கிறிஸ்தவ தேவாலயங்களில் - புதைக்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் சவப்பெட்டிகள் நீண்ட வரிசையில் காணப்படுகின்றன.

இறந்தவர்களின் உடல்கள் பல நாட்களாக பூட்டிய அறைகளுக்குள் வைக்கப்பட்டுள்ளன.

வைரஸ் தாக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதால் அதனைக்கையாள முடியாமல் இறுதிக் கிரியை களை நடத்துபவர்கள் திணறுகின்றனர்.

கடந்த புதன் கிழமை வரை இத்தாலியில் உயிரிழந்தவர்கள் அனைவரும் இறுதிச்சடங்குகள் எதுவுமின்றி புதைக்கப்பட்டனர்.

லொம்பார்டி பிராந்தியத்தின் பெர்கமோவில் இதுவரை 1917 பேர் உயிரிழந்துள்ளனர், 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பிராந்தியம் முழுவதிலும் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை இதுவரை வெளியாகவில்லை.ஆனால் பிராந்தியத்தில் இறுதிச் சடங்குகளை நடத்துவதில் பிரபலமான சி.எவ்.பி. நிறுவனம் மார்ச் முதலாம் திகதி முதல் 600 இறுதிச்சடங்குகளை நடத்தியதாக தெரிவித்தது.

கடந்த இரண்டு வாரங்களில் ஒரு தலைமுறையே உயிரிழந்தது எனத் தெரிவிக்கும் அந்த நிறுவனத்தின் தலைவர் அன்டோனியோ ரிச்சார்டி நாங்கள் இதனைப் போல இதுவரை எதனையும் பார்த்ததில்லை. இது எங்களை அழச்செய்கின்றது எனத் தெரிவித்தார்.

பெர்கமோவில் இறுதிச்சடங்குகளை நடத்தும் 80 நிறுவனங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் பல தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அந்த நிறுவனங்கள் காணப்படுகின்றன, சவப்பெட்டிகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது.

இறுதிச்சடங்குகளைக் கையாளும் பணியாளர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுவதும் பாரிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

இறந்தவர்களை கையாள்வது குறித்து வைத்தியசாலைகள் கடுமையான விதிமுறைகளை அறிவித்துள்ளன.

இறந்தவர்களுக்கு உரிய ஆடைகளை அணிவிக்காமலே அவர்களின் உடல்களை பெட்டிகளுக்குள் வைக்கின்றனர். அவர்களின் உடல் மூலம் எற்படக்கூடிய தொற்று அபாயம் காரணமாகவே இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

குடும்பங்கள் தங்கள் அன்பிற்குரியவர்களை பார்க்கவோ? அல்லது உரிய இறுதி மரியாதையை வழங்கவோ? முடியாத நிலை காணப்படுகின்றது. இது உளவியல் ரீதியில் மிகப்பெரும் பிரச் சினை என ரிக்கார்டி தெரிவித்தார்.எங்கள் பணியாளர்கள் பலர் நோய்வாய்ப்பட்டுள்ளதால் உடல்களை கொண்டு செல்ல முடியாத இக்கட்டான நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# பதற்றம் வேண்டாம்! விழிப்புடன் இருங்கள்



## கொரோனா தடுப்பு ஆலோசனைக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் மக்களுக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

மனித உயிர்களைக் காவுகொள்ளும் கொரோனா வைரஸின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் ஆபத்துக் கட்டத்தை நெருங்காத போதிலும் அந்த நோய் பரவல் குடாநாட்டில் பரவாது தடுப்பதற்கான அனைத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளிலும் நாம் தயாராக இருப்பது அவசியம் என்றும் அதற்கான அனைத்து விதமான தேவைப் பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை தர தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த கடற் றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இது குறித்து மக்கள் பதற்றப்படத் தேவையில்லை என்றும் ஆனாலும் விழிப் புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் யாழ்ப்பாணக் குடா நாட்டை யும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்து வது தொடர்பான விசேட உயர்மட் டக் கூட்டம் ஒன்றை யாழ்ப்பாணத் தில் மேற்கொண்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, துறைசார் தரப்பினருடன் விரிவாக ஆராய்ந்தறிந்துகொண்டார்.

மாவட்டத்தின் நிர்வாக மற்றும் சுகாதார உயரதிகாரி கள், படைத் தரப்பின் உயரதிகாரிகள், பொலி ஸார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட உயர்மட்ட ஆராய்வுக் கூட்டத்தில் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்துகொண்டபின் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நோயைக் கட்டுப்படுத்த இலங்கை தீவு முழுவதும் பல் வேறு நடவடிக்கைகளை துறைசார் தரப்பினருடன் பாதுகாப்புத் தரப்பினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் தற்போது யாழ்ப் பாணத்தில் இந்நோய் பரவவாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டப்பட்ட நிலை யில் இந்த நோயை எதிர்கொண்டு எமது மக்களை பாதுகாக்க நாம் அனைவரும் ஒருமித்து முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். இதன் போது ஏதாவது தடைகள் மற்றும் இதர அசௌகரியங்கள் வருமாயின் சேவையை முன்னெ டுக்கும் உங்களுக்கு ஒத்துழைப் புக்களைத் துறைசார் தரப்பினருக்கு தர நாம் தயாராக இருக்கின் றோம்.

தற்போது நாட்டில் ஓர் அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு மக்கள் செறிந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தடுக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இதனால் நோய் பரவலைத் தடுக்க முடியும் என சுகாதாரத் துறையினர் கூறுகின்றனர். வடக்கில் குறிப்பாக யாழ். மாவட்ட நிலைமை தொடர்பில் பல தரப்பினரும் பல்வேறு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன் வைத் துள்ளீர்கள்.

குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்ற சந்தே கத்தில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 9 நோயாளிகளில் பலர் குணமாகி வருவதாக யாழ்.வைத்தியத் துறை சார் தரப்பினரால் தெரிவிக் கப்பட்டுள்ளது ஒரு நற்செய்தியாகவே உள்ளது.

அத்துடன் அரியாலை பிலதெனியா தேவாலயத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்ற மதப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் கண்காணிப்பது முக்கிய மானதாகும். இது தொடர்பிலும் ஆராயப்பட்டு அவர்கள் அனை வரும் இனங்காணப்பட்டு பரிகாரங்கள் கொடுக்க வேண்டும்.

அத்துடன் இன்று ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டவுடன் உணவுப் பொருட்களை கொள் வனவு செய்ய பெருமளவில் மக்கள் கடைகளில் கூடுவதற்கான சந்தர்ப்பம் அதிகம் காணப்படுகின்றது.

இந்நிலையில் மக்களை குறித்த உயிர்கொல்லி தொற்றி லிருந்து பாதுகாப்பது, உணவுப் பொருட்களைத் தட்டுப்பாடு இன்றி வழங்குவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் துறைசார் தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் அவசர தேவைகளுக் காக அதிகரிக்கப்பட வேண்டிய அம்புலன்ஸ் சேவை, வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவது மற்றும் அவசர கொரோனா தடுப்பு மையங்கள், அதற்கான ஆளணி மற்றும் இதர தேவைப்பாடுகளின் பற்றாக் குறை தொடர்பிலும் துறைசார் தரப்பினர் கூறிய கருத்துக்கள் ஊடாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது. எனவே இவை அனைத்தையும் துறைசார் தரப்பினருடன் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுத்தர நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

அத்துடன் இந்நிலை தொடர்ந்தும் ஏற்பட்டுள்ளதால் நாளாந்தம் உழைத்து வாழும் குடுப்பங்களுக்கான நிவாரணங்களை வழங்குவது அதை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமுர்த்தி உள்ளிட்ட தரப் பினரால் முன்னெடுக்க வேண்டிய பொறிமுறைகள் தொடர்பிலும் குறித்த தரப்பினருக்கு அறிவுறுத் தல் கொடுத்திருந்தேன். அதுமட்டு மல்லாது யாசகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் அவர்களது உண வுத் தேவைகளை தீர்ப்பதற்கும் வழிவகைகள் ஆராயப்பட்டன எனத் தெரிவித்த அமைச்சர் இந் நோய் தொற்றுக் குறித்து மக்கள் பதற்றப்பட தேவையில்லை என்றும் ஆனாலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் மேலும் வலியுறுத்தினார். (இ-10)

# போதகரின் ஆராதனை நிகழ்வில் பங்கேற்ற அனைவரையும் உடன் தனிமைப்படுத்தவும்

## வடக்கு ஆளுநர் அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த மதபோதகருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது வெளியுறவு அமைச்சின் ஊடாக உறுதிசெய்யப்பட்டது என வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

மேற்படி சுவிஸ் நாட்டில் இருந்து இந்த மாதம் 10 ஆம் திகதி காலை வருகைதந்த 61 வயதுடைய சுவிஸ் பிரஜையான மதபோதகர் சிவராஜ் போல் சற்குணராஜா குறிப்பாக யாழ்ப்பாணம் அரியாலை கண்டிவீதியில் அமைந்துள்ள பிலதெனியா தேவாலயத்தில் விசேட ஆராதனை நிகழ்விலும் வேறுசில நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் இம் மாதம் 16ஆம் திகதி மீண்டும் தனது நாட்டுக்குச் சென்ற பின்னர் அங்கு அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. தற்பொழுது பேண் நகரில் உள்ள இன்செல்ஸ் பிற்றல் பல்கலைக்கழக வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கான சிகிச்சையை அவர் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்குறித்த போதகரின் தலைமையில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வுகளில் பங்கெடுத்த அனைவரும் தங்கள் வீடுகளில் உடனடியாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதுடன் தங்களது விபரங்களை அருகிலுள்ள பொதுச்சுகாதார உத்தியோகத்தருக்குத் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களுடையதும் தங்களைச்சார்ந்தவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது மிக அவசியமானதென்றும் தெரிவிக்கப்பட்டது. தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார். (இ)

# ஒன்றிணைந்து செயற்படுவோம் பாராளுமன்றத்தை கூட்டுங்கள்

## ஜனாதிபதியிடம் ஏரான் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு முதலிடம் கொடுத்து அரசியல் வேறுபாடுகளை மறந்து கொரோனா வைரஸ் தாக்கத்தை இல்லாதொழிப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டிய நேரம் வந்துள்ளதாக தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எரான் விக்கிரமரத்ன, பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்தார்.

நோய்த் தொற்று நிலைமை என்பது இன, மத பேதங்கள் இன்றி அனைவருக்கும் பொதுவானதாகும். எனவே, அதனை முறியடிப்பதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியமானதாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு இந்த வைரஸ் பரவலுக்கு எதிராகப் போராடுவது தொடர்பில் ஒன்றிணைந்து தீர்மானம் எடுப்பதற்காக பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொள்கின்றேன்.



இந்த வைரஸ் தாக்கத்திலிருந்து எமது நாட்டைக் காப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணையத் தயாராக இருக்கின்றோம்.நாட்டுப் பிரஜைகள் என்ற வகையில் அனைவரும் சுகாதாரத் துறை அதிகாரிகளுடைய அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

அத்துடன் நாட்டு மக்களின் நலனுக்காக சேவையாற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டார். (இ)

## அழையுங்கள்...

021 222 4444, 071 019 9199 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்கள் தமது சேவையை பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-310)

## வடக்கு மக்...

ஓமந்தை, மற்றும் கனகராயன் குளம் பகுதியில் இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், ஏ9 வீதி மூடப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தற்காலிக அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்கள் மாத்திரம் குறித்த வீதியால் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதுடன் சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-3)

## பிரபல இயக்...

காலமானார்.

இவர் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர், கதாசிரியர், வசன கர்த்தா, நடிகர் எனும் பன்முகங்களைக் கொண்டவர்.

1941 ஆம் ஆண்டு பிறந்த இவர் திரைப்படம் தவிர்ந்து மேடை நாடகம், தொலைக்காட்சித் தொடர்கள் என பலவற்றிலும் நடித்துள்ளார். நடிகர் கிஷ்மு இவரது சகோதரர் ஆவார்.

இவர் இயக்கிய சம்சாரம் அது மின்சாரம்' திரைப்படம் பெரும்பாலான இந்திய மொழிகளில் மீண்டும் தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடக்கின் 5...

மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டங்களில் காலை 6.00 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு சட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு மீண்டும் பிறப்பிக்கப் படும்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் வாழும் மக்களுக்கு தாங்கள் வாழும் மாவட்டங்களுக்கு வெளியே பயணம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த தினங்களில் வடக்கிற்கு பயணம்செய்த சுவிஸ்சர்லாந்தில் இருந்து வருகைதந்த கொரோனா வைரஸ் தொற்றுடைய மத குருவை சந்தித்த மற்றும் அவருடன் தொடர்புகொண்ட அனைவரையும் அடையாளம் காணும் வரை இந்த பயணத் தடை நடைமுறையில் இருக்கும்.

ஐந்து மாவட்டங்களிலும் வசிக்கும் மக்கள் கொரோனா தாக்கத்திற்கு உற்படுவதிலிருந்து பாதுகாக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கின் மக்கள் வாழ்க்கையை பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாட்டினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு அரசாங்கம் அங்கு வாழும் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (ம-3)

## கொரோனா...

தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண் ணிக்கை 81 ஆக ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப்பெண்ணுடன் 82 பேர் அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 235 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர்.

அத்துடன், மட்டக்களப்பு, வவுனியா உள்ளிட்ட 22 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3 ஆயிரத்து 290 பேர் வரை தங்கவைத்து கண்காணிக்கப்படுகின்றனர். (ம-3)

### யாழில்.மதபோதனையில் கலந்து கொண்ட தாய்

# மகன் கொரோனா சந்தேகத்தில் வவுனியா வைத்தியசாலையில்

(வவுனியா)

யாழில் இடம்பெற்ற கிறிஸ்தவ மத போதனையில் கலந்து கொண்ட தாய் ஒருவரின் மகன் கொரனா தொற்று சந்தேகத்தில் வவுனியா வைத்தியசாலையில் நேற்று மாலை 5.00 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் சுவிஸ்சில் இருந்து வருகை தந்த மத போதாகர் ஒருவரினால் போதனை வழங்கப்பட்டது. குறித்த மதபோதகர் சுவிஸ் திரும்பிய நிலையில் கொரனா தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மத போதகருடன் தொடர்பை ஏற்படுத்திய நபர் ஒருவர் யாழில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவராக இனங்கானப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த போதனைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வவுனியா, புளியங்குளம் வடக்கு, முத்துமாரி நகர் பகுதியில் இருந்து சென்ற 6 பேர் சுகாதாரப் பிரிவினரினால் நேற்று தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர் களில் ஒருவருடைய மகன் ஒரு வருக்கு அதிகளவிலான காய்சல் ஏற்பட்டுள்ள நிலையில் கொரனா தொற்று ஏற்பட்டுள்ளதா? என்ற சந்தேகத்தில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த 31 வயதுடைய இளைஞனின் தயார் மத போதனையில் கலந்து கொண்டிருந்த நிலையிலேயே தற்போது மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனை வவுனியா வைத்தியசாலையில் தனிமைபடுத்தியுள ளதுடன் கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனை நடவடிக்கைகளையும் வைத்தியர்கள் முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

### கொரோனா தொற்றியுள்ள போதகருடன்

# யாழில் 180 பேர்வரை நெருக்கமாக பழகியுள்ளனர்



(கொழும்பு)

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த மதப் போதகருடன் 150 தொடக்கம் 180 பேர் நெருக்கமான தொடர்பாடலைக் கொண்டிருந்துள்ளனர் என்று இராணுவத் தளபதியும் கோரோனா தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனர் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை கண்டி வீதியில் அமைந்துள்ள பிலதெனியா தேவாலயத்தில் கடந்த மார்ச் 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சிறப்பு ஆராதனை இடம் பெற்றுள்ளது.

இந்த ஆராதனையை சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த போதகர் நடத்தியுள்ளார். சுவிஸ்க்கு திரும்பிய நிலையில் அவருக்கு கோரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அத்துடன், அவரைச் சந்தித்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட போதகரு டன் 150 தொடக்கம் 180 பேர் நெருக்க மான தொடர்பைப் பேணியுள்ளனர் என அவர் தெரிவித்தார். (ம-3)

## இத்தாலியில்...

அனைத்துப் பகுதிகளுக்கும் பரவி மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனா வைரசுக்கு சீனாவை விட இத்தாலியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், இத்தாலியில் கொரோனா வைரசுக்கு பலியானோர் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதுதொடர்பாக இத்தாலி பிரதமர் கியுஸ்பி காண்டி வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 476 ஆக அதிகரித்துள்ளது. இதையடுத்து, நாட்டில் செயல்படும் முக்கியத்துவம் இல்லாத கம்பெனிகளை மூடும்படி உத்தரவிட்டுள்ளார். (ம-3)

## யாழ்ப்பாண...

பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரனின் சகோதரியாவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இறந்தவர்களை புதைப்பதற்கு...

சீனாவில் தொடங்கிய ஆட்கொல்லி கொரோனா வைரஸ், சீனா மட்டுமின்றி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. சீனாவில் மிகப்பெரிய மனித பேரழிவை ஏற்படுத்தி உள்ள இந்த நோய் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி உள்ளது. கொரோனா வைரஸ் உருவான சீனாவை விட, இத்தாலி அதிக அளவில் உயிரிழப்புகளை சந்தித்து வருகிறது.

அமெரிக்கா, சீனா, பிரான்ஸ் போன்ற வல்லரசு நாடுகளையே ஆட்டம் காட்டி வரும் இந்த வைரஸ், இந்தியா போன்ற வளரும் நாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

பல நாடுகளும் தங்களது எல்லைகளை மூடியுள்ளன. பல நகரங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. விமானம், பேருந்து, ரயில், கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளன. பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்கள் செயல்படாமல் முடங்கிக்கிடக்கின்றன.

இந்நிலையில், கொரோனாவிற்கு தற்போதைய நிலவரப்படி உலகளவில் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்தை தாண்டியுள்ளது. (ம-3)

## கத்தியுடன் நட...

பயணித்த நிலையிலேயே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சந்தேகநபர்களை கைது செய்த பின்னர் மேற்கொண்ட விசாரணைகளின் போது, ஆடு ஒன்றை வெட்டி இறைச்சி ஆக்குவதற்காக அருகில் உள்ள வீடொன்றுக்கு தாம் கத்தியுடன் சென்றதாக தெரிவித்துள்ளனர். (ம-3)

## ஊரடங்குவேளை வீதியில்...

றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நாளை காலை 6.00 மணி வரை ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மதிக்காது வீதிகளில் நடமாடிய 790 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 256 வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. அவை நீதிமன்ற நடவடிக்கைக்கு உள்படுத்திய பின்னரே உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

## யாழில் முதலாவது கொரோனா...

எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே சிகிச்சையளிக்கப்படும் என பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த தொற்றுக்குள்ளானவர், சுவிஸ் நாட்டிலிருந்து வந்த போதகருடன் அரை மணி நேரம் பேசியதாகத் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது காய்ச்சல் மற்றும் சுவாசப்பை அழற்சி ஆகியவற்றினால் குறித்த நபர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு நடத்தப்பட்ட சோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த நோய் பற்றியும் மேற்படி பாதிரி பற்றியும் செய்திகள் வெளி வந்த உடனேயே விரைவாக செயற்பட்டு அவருடன் தொட்ர்பு பட்ட 134 பேர் வரையில் நேற்றே அடையாளம் காணப்பட்டு வீடுகளினுள் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு விட்டனர்

வடமாகாண சுகாதார பணிப்பாளர் (PDHS), யாழ் சுகாதார பணிப்பாளர் (RDHS), சுகாதார வைத்திய அதிகாரிகள் (MOH) மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் (PHI) அனைவரும் நிச்சயமாக இதற்காக பாராட்டப்பட வேண்டியவர்கள்

ஒரே நாளில் இவ்வளவு தொடர்புகளை கண்டு பிடித்தல் என்பது மிகவும் சவாலான நடவடிக்கை ஆகும்... அவர்களுக்கு இலங்கையே கடமைப்பட்டுள்ளது

இன்னும் ஒருசிலர் வவுனியா கிளிநொச்சி மற்றும் மன்னார் பகுதிகளில் உள்ளமையால் அவர்களையும் கண்டு பிடித்து தனிமைப்படுத்தும் வரை ஊரடங்கு உத்தரவை நீடிக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் (GMOA) இன்று மாலை ஜனாதிபதி விசேட படையணி கூட்டத்தில் இன்று (நேற்று) கோரப்பட்டமைக்கு அமைய ஜனாதிபதியால் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது

பல்வேறு உள்ளக மற்றும் வெளி நெருக்கடிகளின் மத்தியில் இயங்கிவரும்

வடமாகாண சுகாதார பணிப்பாளர், யாழ் சுகாதார பணிப்பாளர், சுகாதாரவைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள்

அனைவருக்கும் உங்கள் ஒத்துழைப்பை வழங்குங்கள் இக்கொடிய நோயிலிருந்து எமது நாட்டை பாதுகாத்துக் கொள்வோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,9,10)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.